தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 11, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 ஜூன் 25, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்."

பிறருக்கு உதவிடும் பெருந்தன்மையாம் ஒப்புரவு உடையவனிடம், செல்வம் சேர்ந்தால் அது ஒரு நல்ல மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுவது போன்றதாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். (குறுக்கீடுகள்) வினா வரிசை எண் 81, (குறுக்கீடுகள்)*

(எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி உள்ளிட்ட அனைத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன், (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

[2024 ஜூன் 25

81—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

***54610—திரு. வி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் நகராட்சியில் 13, 14, 17, 18 மற்றும் 20 ஆகிய வார்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

*திருவள்ளூர் நகராட்சியில் தற்போது மக்கள் தொகை 64,082 ஆகும். (குறுக்கீடுகள்) தற்போது இந்நகராட்சியில் 13 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 43.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் உள்ளன. (குறுக்கீடுகள்) இதன்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்) வார்டு எண்கள் 13, 14, 17, 18 மற்றும் 20 ஆகிய வார்டுகளில், (குறுக்கீடுகள்) நகராட்சிக்குச் சொந்தமான இடம் எதுவும் இல்லாததால் வருவாய்த் துறையினரிடம் நிலம் கோரி பெறப்பட்டு, (குறுக்கீடுகள்) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ***

2. முக்கியப் பிரச்சினைகளை வினாக்கள்—விடைகள் நேரத்திற்கு முன் எழுப்புதல்

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எல்லோரையும் உட்காரச் சொல்லிவிட்டு நீங்கள் எழுந்து பேசினால் ok. (கூச்சல்–குழப்பம்)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[பேரவைத் தலைவர்]

(எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி உள்ளிட்ட அனைத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

இல்லை. *(குறுக்கீடுகள்)* நாங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. நான் உங்களிடம் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவை நடவடிக்கைகளில் பங்கு பெறுங்கள். இந்த அவையை மதியுங்கள். முதலில் இந்தச் சட்டமன்றத்தை நீங்கள் மதிக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையினுடைய மாண்பு, ஜனநாயகம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)*

(எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி உள்ளிட்ட அனைத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

பேரவை விதிகளை மதிக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)* நீங்கள் அதில் தவறுகிறீர்கள். நீங்கள் அவையை மதிக்கவில்லை. அது தவறு. எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். நான் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்ததும் உங்களுக்குப் பேசுவதற்கு நேரம் தருகிறேன். *(குறுக்கீடுகள்)*

(திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. மா. செந்தில்குமார், முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், திரு. கடம்பூர் ராஜு, திரு. சு. ரவி, திரு. P.R.G. அருண்குமார், திரு. A.K. செல்வராஜ், திரு. S. சேகர் உள்ளிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு எதிரில் நின்று கொண்டு கோஷமிட்டனர்.)

நீங்கள் தேவையில்லாமல், உங்களுக்கு என்ன பிரச்சினையோ இங்கு வந்து இருக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* அதற்கு நான் என்ன செய்ய முடியும்? உங்கள் பிரச்சினைக்கு நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். அது இல்லை. *(குறுக்கீடுகள்)* நான் வாய்ப்பு தரவே மாட்டேன். அதாவது எல்லாம் தெரியும். *(குறுக்கீடுகள்)* உங்களுக்கும் அவை விதிகளைப் பற்றி தெரியும். *(குறுக்கீடுகள்)*

(எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி உள்ளிட்ட அனைத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

முக்கியப் பிரச்சினைகளை வினாக்கள்-விடைகள் நேரத்திற்கு முன் எழுப்புதல்

[பேரவைத் தலைவர்] *[2024 ஜூன் 25*

தயவுசெய்து அனைவரும் இருக்கையில் அமருங்கள். முதலில் இந்த அவையை மதியுங்கள். (குறுக்கீடுகள்) சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றத்தை முதலில் மதிக்க வேண்டும். நீங்கள் மதிக்கவில்லை. நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) நீங்கள் தேவையில்லாமல் செய்கிறீர்கள். முக்கியமான பிரச்சினை என்பதனால்தான் எடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் தொடர்ந்து சட்டமன்றம் நடக்கவிடாமல் இடையூறு செய்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் கூடிப்பேசி இந்த அவையினுடைய மாண்பைக் குறைக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இந்த அவையை மதிக்கவில்லை நீங்கள். இந்த அவையை மதிக்காமல், நீங்கள் பேச வாய்ப்பு கேட்பது நியாயம் கிடையாது. நீங்கள் பேசுகிற எதுவுமே அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) தயவுசெய்து இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இருக்கையில் அமருங்கள். யாருமே பேசாதீர்கள். இருக்கையில் உட்காருங்கள். நீங்கள் நினைத்த நேரத்தில் நினைத்தவுடனே பேசுவதற்கு இது பொதுக் கூட்ட மேடை கிடையாது. (குறுக்கீடுகள்) நீங்கள் தொடர்ந்து இந்த அவைக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டிருப்பதால் உங்கள் அனைவரையும் அவையிலிருந்து வெளியேற்ற அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகின்றேன். இன்று ஒருநாள் மட்டும் உங்களுக்கு அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாத அளவுக்கு வெளியேற்ற அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

அனைவரையும் வெளியேற்றும்படி அவைக் காவலர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) அவைக் காவலர்கள் வாருங்கள். நீங்கள் பேசுகிற எதுவுமே அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) உங்களுக்கு அவையிலிருந்து வெளியே போக வேண்டும். உங்கள் மைக் வெளியே இருக்கிறது. நீங்கள் அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். சென்று வாருங்கள்.

(திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. மா. செந்தில்குமார், முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், திரு. கடம்பூர் ராஜூ, திரு. சு. ரவி, திரு. P.R.G. அருண்குமார், திரு. A.K. செல்வராஜ், திரு. S. சேகர் உள்ளிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு எதிரில் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டனர்.)

முற்பகல் 9–35

நீங்கள் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மைக் அங்கே இருக்கிறது. உங்கள் மைக்கில் போய் நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) போய்விட்டு வாருங்கள். நன்றாகப் போய்விட்டு வாருங்கள். நீங்கள் இந்த அவையை மதிக்க வேண்டும். அவை மரபுகளை மதிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையில் இருந்து வெளியேற்றுங்கள்" என்று அவைக் காவலர்களுக்கு உத்தரவிட்ட பிறகு, திரு. A.K. செல்வராஜ், முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் மற்றும் திரு. சு. ரவி ஆகியோர் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு எதிரே தரையில் அமர்ந்தனர்.)

அவை மாண்பை மதிக்க வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும். மைக் தயாராக இருக்கிறது. போய்விட்டு வாருங்கள். நீங்கள் ஒரு முடிவோடு அவைக்கு வந்திருக்கிறீர்கள். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் சபையில் பேசக் கூடாது என்ற முடிவுடன் இருக்கிறீர்கள். எனக்கு நன்றாகத் தெரியும். போய்விட்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சபையினுடைய மாண்பைக் குலைக்கின்ற வகையில் நடந்துகொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையில் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.) **

நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கையின் அருகில் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் இந்த அவையை மதிப்பதில்லை. அவை மாண்பை மதிப்பதில்லை. அவையினுடைய மரபைக் கடைபிடிப்பது இல்லை. பொதுக் கூட்ட மேடையில், வந்தவுடன் பேசுவது போன்று பேச நினைக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) சட்டமன்றத்தை அவமதிக்கின்ற வகையில் நீங்கள் செயல்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையில் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

நீங்கள் இந்தச் சபையை மதிக்காமல் தொடர்ந்து சபையை புறக்கணிப்பதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)

நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசியது எதுவுமே அவைக் குறிப்பில் இடம் பெறாது என்பது ஏற்கெனவே தெரியும். இருக்கின்ற அனைவருக்கும் ஓர் அன்பான தகவலைச் சொல்கின்றேன். ஏற்கெனவே இந்தச் சபைக்கு வந்த முதல் நாளே இதுபோன்றுதான் செயலில் ஈடுபட்டு, அவர்கள் அன்று வெளியேற்றப்பட்டார்கள். அன்று கவன ஈர்ப்புத் தீர்மானத்தை பல மாமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருந்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களும் அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தார்கள். உடனடியாக அதற்கு Zero Hour*-ல் எப்போதும் வழக்கம்போல், கேள்வி நேரம் முடிந்தவுடன் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும். அந்த வகையில் கேள்வி நேரம் முடிந்தவுடன் அது எடுத்துக்கொள்ளப்பட்டது. அன்று அவர்கள் இதுபோன்ற செயலில் அவையினுடைய நன்மதிப்புக்கும், அவையினுடைய செயல்பாடுகளுக்கும், மரபுக்கும், மாண்புக்கும் இடையூறாக திருக்குறள் வாசித்து முடித்தவுடன் மக்கள் பணியாகிய வினாக்கள்-விடைகள் நேரத்திற்குக்கூட அவர்கள் காத்திருக்காமல் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டதால், அன்று முழுவதும் அவர்களை அவை நடவடிக்கைகளிலிருந்து வெளியேற்றினேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், அவர்கள்*

பங்குபெற வேண்டும். அவர்களுடைய கருத்தை இங்கே பதிவு செய்ய வேண்டுமென்பதற்காக கேள்வி நேரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே இடையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடம் ஒரு கோரிக்கை வைத்து, அவர்களை இன்று அவையிலிருந்து வெளியேற்றியதை இரத்து செய்து, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கு அவர்களுக்கு நீங்கள் ஆணையிடுங்கள் என்று கேட்டார்கள். அந்த அடிப்படையில் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அந்தத் தண்டனை இரத்து செய்யப்பட்டு, உடனடியாக வாருங்கள் என்று சொன்னோம். அவர்கள் இந்த அவைக்கு வரவில்லை. இந்த அவையிலே மற்ற மாமன்ற உறுப்பினர்கள், எல்லா கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் அந்த விவகாரத்தைப் பற்றி இங்கே பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெளிவாக அதற்குரிய பதிலையும் சொல்லியிருக்கின்றார்கள். இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவருடைய முகத்தைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரிந்திருக்கும். தன்னுடைய குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு சோக நிகழ்வாக நினைத்து மிக வேதனையோடு ஒவ்வொரு குடும்பத்திற்கும் என்ன தேவை என்பதை அறிந்து அதை இங்கு அறிவிப்பாக அனைவருக்கும் சொன்னார்கள்.

முற்பகல் 9–40

ஒரு கூட்டத் தொடர் நடைபெறும்போது, ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானமோ அல்லது வேறு தீர்மானமோ கொண்டுவந்து, அதில் எல்லோரும் பேசி, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது மற்ற மாண்புமிகு அமைச்சர்களோ பதில் சொல்லிய பிறகு, அந்தப் பொருள் குறித்து அந்தக் கூட்டத் தொடர் முழுவதும் பேசுவதற்கும் அனுமதியில்லை, அதை எடுத்துக்கொள்வதும் சபை மரபல்ல. அது ஒருபோதும் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. இது, முதல்வராக 4 ஆண்டுகாலம் பணியாற்றிய மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ஐயா, திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களோடு பல மூத்த அமைச்சர்களாக இருந்தவர்கள்கூட அங்கே இருக்கின்றார்கள். எதற்காக இந்தப் புறக்கணிப்பைத் தொடர்ந்து செய்கிறார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை. கள்ளக்குறிச்சி சம்பவத்தினால் ஏற்பட்ட மனவேதனையோடு அவர்கள் இருந்ததுபோல் எனக்குத்

தெரியவில்லை. அவர்கள் இதை அரசியலாக்க வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடுதான், அவர்கள் இதைச் செய்கிறார்கள். இம்மாமன்றம், நீண்ட நெடிய வரலாற்றுக்குச் சொந்தமானது. நினைத்த நேரத்தில் நினைத்தவர்கள் எல்லாம் எழுந்து பேசுவதில்லை. அதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிப்படிதான் ஒவ்வொரு நிகழ்வும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவே, அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் வேண்டுமென்று கேட்டால், அதை எழுதிக்கொடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேச வேண்டுமென்று எழுதித் தந்தால், அதுகுறித்து விவாதித்து, விதியைத் தளர்த்தி, அதன் பின்புதான் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேச முடியும். அதுவும் நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாமலா இருக்கின்றது? அப்படித் தெரிந்தும், வேண்டுமென்றே இந்த அவையின் நடவடிக்கைகளில் இடையூறு செய்ய வேண்டும்; புறக்கணிக்க வேண்டும்; மாண்பைக் குறைக்க வேண்டும்; மதிப்பைக் குறைக்க வேண்டும் என்று தொடர்ந்து செயல்படுவது வேதனைக்குரியது. இதை வன்மையாகக் கண்டித்து, இன்று ஒரு நாள் மட்டும் அவர்கள் இந்த அவை நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்று அவர்களை வெளியேற்றம் செய்திருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக இதே அவையில் கடந்த 20-6-2024 அன்று ஒரு மணிநேரத்துக்கும் மேலாக அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இந்த அவையிலே விரிவாகப் பேசியிருக்கிறார்கள். அதற்கு நானும் சரியான விளக்கத்தை அளித்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றையதினம் அவையில் இருந்து, முக்கிய எதிர்க்கட்சியான அ.தி.மு.க. தனது கருத்தைப் பதிவு செய்திருக்க வேண்டும். மாறாக, தேவையற்ற பிரச்சினையை அவை கூடியதும் கிளப்பினார்கள்.

அவையினுடைய விதிமுறைப்படி, கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகுதான் மற்ற அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படித்தான் விதி இருக்கிறது. ஆனால், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் விதிமுறையை மீறி, உடனடியாக அந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இங்கே ஒரு பெரிய இரகளையே செய்திருக்கிறார்கள்.

2024 ஜூன் 25] [திரு. மு.க. ஸ்டாலின்]

கேள்வி–பதில் நேரம் முடிந்ததும் கள்ளக்குறிச்சி பிரச்சினையைப் பற்றித்தான் விவாதிக்கப் போகிறோம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லியும், அதையும் மீறி அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு, ஒரு கலவரத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகத் திட்டமிட்டு அப்படி நடந்து கொண்டார்கள். அதற்குப் பிறகு நீங்கள் வேறு வழியில்லாமல் அவர்களை அன்றைக்கு அவையிலிருந்து வெளியேற்றியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகுதான் நான் அன்றைக்கு அவைக்கு வந்தேன்; வந்ததற்குப் பிறகு இதைக் கேள்விப்பட்டவுடன், மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெறுகிறபோது எதிர்க்கட்சி, அதுவும் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. அவையில் இருக்க வேண்டும்; எனவே மறுபரிசீலனை செய்து, இதைச் சரி செய்ய வேண்டுமென்று நான் உங்களிடத்திலே வேண்டுகோள் வைத்தேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அவர்கள் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதித்தீர்கள். ஆனால், அதற்குப்பிறகும் அதையும் ஏற்றுக்கொள்ளாமல், மீண்டும் மீண்டும் இந்த அவைக்கு வந்து ஒரு கலவரத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காகத் திட்டமிட்டு இப்படிப்பட்ட காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

வேறு ஒன்றுமல்ல; நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது. (மேசையைத் தட்டும் ஒலி) அது அவர்களுடைய மனதை உறுத்துகிறது; கண்ணை உறுத்துகிறது. அதை மக்களிடமிருந்து எப்படி மாற்றுவது என்பதற்காக இந்தக் காரியத்தைத் திட்டமிட்டு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது, அதற்கு என்னென்ன பரிகாரம் செய்யப் போகிறோம் என்பதைப் பற்றியெல்லாம் நான் பல்வேறு விளக்கங்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

முற்பகல் 9–45

கள்ளக்குறிச்சி சம்பவத்துக்கான உண்மையான காரணத்தை அறிய நீதியரசர் கோகுல்தாஸ் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது; சி.பி.சி.ஐ.டி. வசம் இந்த வழக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது; உள் துறைச் செயலாளரையும், டி.ஜி.பி.யையும் ஆய்வு செய்து உடனடியாக அறிக்கை தரச் சொல்லியிருக்கிறேன்; குற்றவாளிகளில் 20–க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்;